# மதுராவல பிரதேச சபை
# கழுத்துறை மாவட்டம்

-----------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 திசெம்பர் 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் மதுராவல பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதுராவல பிரதேச சபையின் செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நேர்க்கூலி அடிப்படையில் நிறைவேற்ற வேண்டியிருந்த 9 வேலைகளில் ரூபா 1,432,701 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை செலவினத் தலைப்பில் சாட்டப்பட்டு கடன்கொடுத்தோராக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் தொங்கல் கணக்கில் ரூபா 15,164 தொகையான மீதி தொடர்பாக அதற்குரிய கணக்கீட்டுக் குறைபாடுகளை ஆராய்ந்து பார்த்து சரிசெய்வதற்குப் பதிலாக அந்த மீதியை திரண்ட நிதியத்தில் செலவு வைத்து தொங்கல் கணக்கு தீர்க்கப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 756,612 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,945,212 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,481,831 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 572 | 227 | 878 |
| (ii) | வாடகை | - | - | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 236 | 236 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 13,688 | 7,188 | 6,548 |

**2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 4,191,777 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 9,218,939 |

**2.2.3 ஆதனவரி**

முன்னைய வருடங்களில் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 396,768 தொகையான ஆதனவரி மீதி 2012 ஒக்தோபர் வரையிலும் அறவிடவேண்டியிருந்தது.

**2.2.4 ஏக்கர் வரி**

19 சொத்துக்களிலிருந்து நீண்ட காலத்திற்கு முன்பிலிருந்து கொண்டுவரப்படுகின்ற நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 31,708 ஆகும்.

**2.2.5 கைத்தொழில் மற்றும் வியாபார வரிகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் கைத்தொழில் வரி மற்றும் வியாபார வரிகள் முறையே ரூபா 29,770 மற்றும் ரூபா 56,050 தொகைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.3 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் XXIV ஆம் பந்தியின் பிரகாரம் பிரதேச சபையொன்று வணிக மற்றும் கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்காக அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறவேண்டிய போதிலும் சபையினால் 2011 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட பலவர்ண மரங்கள் மற்றும் பூ வாளிகள் தயாரிக்கும் செயற்திட்டத்திற்காக அவ்வாறான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 49,450 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 2.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 5,442,000 தொகையான 10 செலவினத் தலைப்புக்களில் ரூபா 717,500 கூட்டுத்தொகையானது ஏனைய செலவினத் தலைப்புகளுக்கு மாற்றப்பட்டதன் பின்னர் தேறிய நிதிஏற்பாடு ரூபா 4,724,500 தொகை இருந்ததுடன் அந்த செலவினத் தலைப்புக்களின் உள்ளவாறான செலவினம் ரூபா 2,532,815 ஆனமையால் ரூபா 2,191,685 தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் செலவினத் தலைப்புக்களுக்கிடையே நிதிஏற்பாட்டை மாற்றியதன் பின்னரும் சேமிப்பு 30% வீதத்தை விஞ்சியிருந்தது.

(ii) 7 செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட ஆரம்ப நிதிஏற்பாட்டில் 30% இற்கும் அதிகமான நிதிஏற்பாடு ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.

(iii) 10 செலவின விடயங்களிலிருந்து ஏனைய செலவின விடயங்களுக்கு ரூபா 2,620,000 தொகை மாற்றப்பட்டதன் பின்னரும் எவ்வித பணமும் செலவிடப்படாது நிதிஏற்பாடு 100% ஆக ரூபா 4,565,000 தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

(iv) நிதிஏற்பாடு முடிவடைந்திருந்த 13 செலவின விடயங்களுக்காக நிதிஏற்பாட்டை மாற்றுவதற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் 01 மாதம் தொடக்கம் 09 மாதம் வரை செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(v) 4 செலவின விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 38,000 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது ரூபா 280,000 தொகையான நிதிஏற்பாடு ஏனைய செலவின விடயங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

(vi) 9 செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 10,550,000 தொகையான மூலதன நிதிஏற்பாடு உரிய செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தன.

(vii) 3 வருமான விடயங்கள் மற்றும் 6 செலவின விடயங்களில் 15% தொடக்கம் 100% வரையிலான இடைவெளியில் சாதகமான முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் 5 வருமான விடயங்கள் மற்றும் ஒரு செலவின விடயம் என்பவற்றில் 18% தொடக்கம் 89% வரையிலான இடைவெளியில் பாதகமான

முரண்களும் வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டமை அவதானிக்கப்படவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு